**2.6.1 விளையாட்டுத் தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.**

## பாடம் 2 சதுரங்கம்



### வாசித்து அறிக.

சதுரங்கம் மிகவும் புகழ்பெற்ற விளையாட்டுகளில் ஒன்றாகும். சதுரங்கம் என்றால் நான்கு அங்கம் என்று பொருள்படும். அரசர்களுக்கு நான்கு அங்கமாக யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, காலாட்படை அணி செய்கின்றன. இது சதுரங்கச் சேனை எனப்படும்.

இதனைப் பின்பற்றியே இவ்விளையாட்டும் சதுரங்கம் எனப் பெயர் பெற்றது. சதுரமான ஒரு பலகையில் அறுபத்து நான்கு கட்டங்கள் இருக்கும். இருவர் விளையாடும் விளையாட்டு என்பதால் இருவருக்கும் உரிய கட்டங்கள் நிறம் வேறுபட்டு இருக்கும். கறுப்பு, வெள்ளை என்ற இரு வண்ணங்களில் இக்கட்டங்கள் அமைந்திருக்கும்.

இரண்டு விளையாட்டாளர்களுக்கும் தனித்தனியே ஆளுக்குப் பதினாறு காய்கள் வீதம் மொத்தம் முப்பத்திரண்டு காய்கள் இருக்கும். இக்காய்களைப் புத்திசாலித்தனமாக நகர்த்தி விளையாடுவதே இவ்விளையாட்டின் முக்கிய அம்சமாகும். இக்காய்களில் அரசன், அரசி, அமைச்சர்கள், குதிரைகள், கோட்டைகள், காலாள்கள் எனப் பெயர் சூட்டப்பட்டிருக்கும். எதிர் எதிரே இக்காய்கள் அடுக்கப்பட வேண்டும். விளையாட்டாளர்கள் விதிமுறைப்படியே காய்களை நகர்த்த இயலும். எதிர் விளையாட்டாளரின் அரசனைக் கைப்பற்றுவதே ஆட்டத்தின் நோக்கமாகும்.

6ஆம் நூற்றாண்டிலேயே இவ்விளையாட்டுத் தோன்றியதாகக் கூறப்படுகின்றது. இன்று உலகம் முழுவதும் சதுரங்க விளையாட்டு புகழ்பெற்றுத் திகழ்கின்றது எனலாம்.

மூலம்: சிறுவர் களஞ்சியம்

**உலகப் புகழ்பெற்ற இந்தியச் சதுரங்க விளையாட்டாளர் யார் என்று உனக்குத் தெரியுமா?**

2.6.1 - விளையாட்டுத் தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

- உரைநடைப் பகுதியைப் பிழையற வாசிக்கச் செய்தல்.
- உரைநடைப் பகுதியில் கூறப்பட்ட முக்கியக் கருத்துகளை உரையாடச் செய்தல்.
- வாய்மொழி கேள்விகளுக்கு விடை கூறப் பணித்தல்.

**வி.வ.கூ:** உலகளாவிய நிலைத்தன்மை **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை **21 ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்



Sumber :- buku teks SJK ms110 Jilid ms 44

1. சதுரங்கம் என்ற சொல்லின் பொருள் யாது?

______________________________________________

2. சதுரங்க விளையாட்டுப் பலகையின் அமைப்பு எவ்வாறு இருக்கும்?

______________________________________________

3. சதுரங்க விளையாட்டுக் காய்களின் பெயர்கள் யாவை?

______________________________________________

4. இவ்விளையாட்டாளர்களின் நோக்கம் என்னவாக இருக்கும்?

______________________________________________

5. இவ்விளையாட்டு எப்பொழுது தோன்றியது?

______________________________________________

6. சிந்திக்கும் ஆற்றலைச் சோதிக்கும் விளையாட்டு என்று ஏன் கருதப்படுகிறது?

______________________________________________

| |
|---|
| சதுரங்கம் என்றால் நான்கு அங்கம் என்று பொருள்படும். |
| சதுரங்க விளையாட்டுக் காய்களின் பெயர்கள் அரசன், அரசி, அமைச்சர்கள், குதிரைகள், கோட்டைகள், காலாள்கள் எனப்படும். |
| இவ்விளையாட்டு 6ஆம் நூற்றாண்டிலேயே இவ்விளையாட்டுத் தோன்றியதாகக் கூறப்படுகின்றது. |
| இவ்விளையாட்டில் எதிர் விளையாட்டாளரின் அரசனைக் கைப்பற்றுவதே ஆட்டத்தின் நோக்கம் ஆகும். |
| சதுரங்க விளையாட்டுப் பலகையின் அமைப்பில் சதுரமான ஒரு பலகையில் அறுபத்து நான்கு கட்டங்கள் இருக்கும். |

## சதுரங்கம் விளையாடுவதால் மாணவர்களுக்கு ஏற்படும் நன்மைகள்:-

**மூளை வளர்ச்சி:**
சதுரங்கம் பயிலும் பிள்ளைகளது மூளை வளர்ச்சியானது ஏனையவர்களை விட விரைவாக இருக்கிறது. இது Dendrites என்கின்ற மூளைப்பகுதியின் வளர்ச்சியை தூண்டுவதாக சில ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

**IQ மட்டத்தை அதிரிக்கின்றது.**
சில ஆய்வுகள் chess விளையாடும் மாணவர்களின் IQ மட்டமானது, ஏனைய மாணவர்ளின் IQ மட்டத்தை விட அதிகமாக இருப்பதை வெளிப்படுத்தியுள்ளது.

**படைப்பாற்றலை (creativity) அதிகரிக்கின்றது**
இவ் விளையாட்டு சிந்திக்கும் ஆற்றலை அதிகரித்து பல கோணங்களில் ஆராயும் திறனை அதிகரிப்பதன் மூலம் படைப்பாற்றலை அதிகரிக்கின்றது.

**தீர்மானம் மேற்கொள்ளும் ஆற்றலை அதிகரிக்கின்றது.**
சதுரங்க விளையாட்டின் போது குறிப்பிட்ட நேர இடைவெளியில் யோசித்து பல தீர்மானங்களை எடுக்க நேரிடும். இந்த ஆற்றல் பின்னர் வாழ்கையில் சந்திக்கும் சவால்களை குறித்தான தீர்மானங்ளை எடுக்க உதவும்.

**ஞாபக சக்தியை அதிகரித்தல்.**
சதுரங்கம் பயிலும் போது பல நுணுக்கங்களை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள பழகுவதால் காலப்போக்கில் ஞாபகசக்தி அதிகரிக்க உதவி புரிகின்றது.

**தலைமைத்துவ பண்பை அதிகரித்தல்.**
தீர்மானம் மேற்கொள்ளும் திறனுடன், பல சதுரங்க சுற்றுப்பயணங்களில் பங்கேற்பதன் மூலம் தன்னம்பிக்கை அதிகரிப்பதன் விளைவாக தலைமை தாங்கும் ஆற்றல் அதிகரிக்கின்றது.

Sumber internet: http://tnschoolsportstrack.blogspot.com/2019/05/blog-post_27.html